வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 13.11.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பீகாரில் 2 கட்டங்களாக நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள், நாளை எண்ணப்பட உள்ளன.

ஏற்றுமதியாளர்களுக்கான மத்திய அரசின் கடன் உத்தரவாத திட்டத்தினால், உலகச் சந்தையில் இந்திய பொருட்களின் போட்டித் திறன் வலுப்பெறும் என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 19-ஆம் தேதி கோவையில், தென்னிந்திய இயற்கை வேளாண்மை மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

புதுச்சேரியில் நாளை நடைபெற உள்ள குழந்தைகள் தின விழாவில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கிறார்.

*பீகார்-எண்ணிக்கை*

பீகாரில் கடந்த 6- 11 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள், நாளை எண்ணப்பட உள்ளன. மாநிலத்தின் அனைத்து 38 மாவட்டங்களிலும், மொத்த 46 வாக்கு எண்ணிக்கை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தலின் போது பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், மூன்றடுக்குப்

பாதுகாப்புடன், வாக்கு எண்ணிக்கை மையங்களின் வலுவறையில், வைக்கப் பட்டுள்ளதாக, பீகார் மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு வினோத் குஞ்சியால் தெரிவித்துள்ளார். வாக்குப் பதிவு மையங்களைச் சுற்றி மாநில போலீசார் மற்றும் மத்திய ஆயுத போலீஸ் படையினர் மூலமாக, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகவும், அவர் கூறி உள்ளார். வாக்குப் பதிவின் போது பணியில் ஈடுபடுத்தப்பட்ட தேர்தல் பார்வையாளர்கள், நாளை வாக்கு எண்ணிக்கையின் போதும் உடன் இருப்பார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

*மோடி-அமைச்சரவை*

மத்திய அமைச்சரவையால் நேற்று அங்கீகரிக்கப்பட்ட, ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உத்தரவாத திட்டம், உலக அளவில் இந்திய பொருட்களின் போட்டித் திறனை வலுப்படுத்தி, சுயசார்பு நாடாக இந்தியா மேம்பட உதவிகரமாக இருக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். ஏற்றுமதி பெருக்கத்திற்கான உத்தேச இயக்கத்தினால் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களும், தொழிலாளர்களுக்கு அதிகத் தேவையுள்ள துறைகளும், முதல் முறையாக ஏற்றுமதியில் ஈடுபடும் தொழில் முனைவோரும் பயன் பெறுவார்கள் என்று சமூக ஊடகத்தில் அவர் தெரிவித்துள்ளார். முக்கியக் கனிமங்களுக்கான ராயல்டி விகிதம் திருத்தி அமைக்கப் பட்டுள்ளதால், விநியோகச் சங்கிலி வலுவடைந்து, புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும், பொருளாதாரத்தில் நீடித்த தன்மை மேம்பட்டு, சுயசார்பு உறுதியாகும் என்றும் பிரதமர் கூறி உள்ளார்.

*மோடி-கோவை*

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 19-ஆம் தேதி கோவை வர இருக்கிறார். கோவை நகரில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இயற்கை வேளாண்மை பற்றிய தென்னிந்திய உச்சி மாநாட்டில் அவர் கலந்து கொள்கிறார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்........

கோவையில் நடைபெற உள்ள, தென்னிந்திய இயற்கை வேளாண்மை மாநாட்டில், தென் மாநிலங்களைச் சேர்ந்த 50 இயற்கை வேளாண் விஞ்ஞானிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்து கலந்துரையாடல் நடத்த இருக்கிறார். இயற்கை விவசாயத்தை பரவலாக்கும் வகையிலான கொள்கைகளை உருவாக்குவது குறித்து, இம்மாநாட்டில் விவாதிக்கப்படும் என, மாநாட்டிற்கான ஏற்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் திரு பி ஆர் பாண்டியன் தெரிவித்துள்ளார். இயற்கை வேளாண்மை, மற்றும், வளமீட்பு சாகுபடி முறைகளின் நன்மைகள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த மாநாட்டில் முக்கியத் துவம் அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மாநாட்டின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சியில் 300-க்கும் மேற்பட்ட அரங்குகள் இடம் பெற உள்ளன.

*முர்மு-போட்ஸ்வானா*

பிராஜக்ட் சீட்டா திட்டத்தின் கீழ் போட்ஸ்வானா இந்தியாவிற்கு வழங்கும் 8 சிறுத்தை புலிகளை முறைப்படி பெற்றுக் கொள்ள, போட்ஸ்வானா தலைநகர் கேபரோன் அருகே இன்று காப்பு வனப்

பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கலந்து கொண்டார். வனப் பகுதியிலேயே சிறிது காலம் தனிமைப் படுத்தி வைக்கப்பட்ட பின்னர் இந்த சிறுத்தைகள் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படும். தென்னாப்பிரிக்க மற்றும் நமீபியாவில் இருந்து இந்தியா ஏற்கனவே சிறுத்தைகளைப் பெற்றுள்ளதும் இந்நாடுகளைப் போலவே போட்ஸ்வானா-விலும் சிறுத்தைகளின் எண்ணிக்கை அதிகம் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*மருத்துவ ஆராய்ச்சி*

சுகாதாரத் துறையில் புதுமைகளை ஊக்குவிக்கும் நாடாக, கடந்த 10 ஆண்டுகளில், இந்தியா மேம்பட்டுள்ளதாக, மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் 114-ஆம் ஆண்டு நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் நாட்டில், சுகாதார ஆராய்ச்சிகளுக்கு உகந்த சூழல், பல மடங்கு வலுப் பெற்றுள்ளதாகவும், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், முக்கியத் தூணாகவே சுகாதாரத் துறை திகழ்வதாகவும் கூறினார். புதிய மருந்துகளை கண்டுபிடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு விடுவதில், பொது துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், எப்படியெல்லாம் ஒருங்கிணைந்து செயல்பட முடியும் என்பதை, இந்தியா உலகிற்கு வெளிப்படுத்தி இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் செயல்படும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் செயல்படும் தகைசால் மையங்கள்,

இதுவரை, உள்நாட்டு அளவிலான 27 மருத்துவ தொழில்நுட்பங்களை பேணி வளர்த்து, பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருப்பதாக அவர் மேலும் கூறினார்.

*எஸ்ஐஆர்-டெல்லி*

தமிழகம் உட்பட 9 மாநிலங்கள், மற்றும், புதுச்சேரி உட்பட 3 யூனியன் பிரதேசங்களில், கடந்த 4-ஆம் தேதி தொடங்கிய சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் கீழ் இதுவரை, 37 கோடி கணக்கெடுப்பு படிவங்கள், வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த 2-ஆம் கட்ட திருத்தப் பணிகளின் கீழ் வரும், 51 கோடி மொத்த வாக்காளர் எண்ணிக்கையில், இது, சுமார் 70 சதவிகிதமாகும்.

*குழந்தைகள் தினம்*

புதுச்சேரியில் நாளை நவம்பர் 14-ஆம் தேதி கருவடிக்குப்பம் பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபத்தில் நடைபெற உள்ள குழந்தைகள் தின விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குகிறார். முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில் நடைபெற உள்ள இவ்விழாவில் சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் உள்ளிட்டோர் கலந்து கொள்ள இருப்பதாக, பள்ளிக் கல்வி இயக்ககம் , செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி-ஏடிஎம்*

புதுச்சேரியில் சோரப்பட்டு அரசுப் பள்ளியில் பயிலும் ஜெயப்பிரியா, கங்காதேவி, பவஸ்ரீ, மோஷிதா, நந்தினி ஆகிய மாணவிகள், ஏடிஎம் அட்டை இல்லாமல், கருவிழி மூலம் பயன்பாட்டாளரை அடையாளம் கண்டு பணம் வழங்கும் வகையிலான ஏடிஎம் இயந்திரம் ஒன்றை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர். படிக்காதவர்களும் பணம் எடுக்க ஏதுவாக ரோபோட்டிக் குரல் மூலம், தேவையான வழி முறைகளை வழங்கும் வகையில், இந்த இயந்திரம் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து அரசுப் பள்ளி ஆசிரியை பொன்மணி, எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் இருந்து ஒரு பகுதி ...........

*சங்கரதாஸ் சுவாமிகள்*

புதுச்சேரியில், நாடக தந்தை சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு நாள், கலை-பண்பாட்டுத் துறை, மற்றும், கலை இலக்கிய பெருமன்றம் சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. கருவடிக்குப்பம் மைதானத்தில் நடைபெற்ற நினைவஞ்சலி நிகழ்ச்சியில், கலை-பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு திருமுருகன், எதிர்கட்சித் தலைவர் திரு ஆர் சிவா, தென்னிந்திய திரைப்பட ஊழியர்கள் சம்மேளனத்தின் தலைவர் ஆர் கே செல்வமணி, திரைப்பட நடிகர் போஸ் வெங்கட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து தென்னிந்திய நடிகர் சங்கப் பிரதிநிதிகள், நாடக நடிகர்கள், தெருக்கூத்து கலைஞர்கள் மற்றும் தமிழ் அறிஞர்கள், சங்கரதாஸ் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*புதுச்சேரி-எஸ்ஜஆர்*

புதுச்சேரியில், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் ஒரு பகுதியாக, தட்டாஞ்சாவடி மற்றும் காமராஜர் நகர் தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள், வார இறுதி நாட்களான, வரும் 15-16 ஆகிய தேதிகளில், அந்தந்த வாக்குச் சாவடிகளில் இருப்பார்கள் என்று, வாக்காளர் பதிவு அதிகாரி அறிவித்துள்ளார். கணக்கெடுப்புப் படிவங்களை இதுவரை பெறாதவர்கள், வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளிடம் இருந்து, அதைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும், படிவங்களைப் பூர்த்தி செய்தவர்கள் சமர்ப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி-சிவசங்கர்*

உழவர்கரை தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில், மொத்தம் சுமார் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகளை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு சிவசங்கர், பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். உழவர்கரை நகராட்சி அதிகாரிகள், மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் இதில் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி-டெங்கு*

புதுச்சேரியில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய் குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை, சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள், கொடி அசைத்து தொடக்கி வைத்தார். புதுச்சேரியில் ஆரம்ப சுகாதார நிலையம், சமுதாய நலவழி மையம், மற்றும் நகர சுகாதார மையங்கள் அமைந்துள்ள எல்லா பகுதிகளுக்கும் இந்த வாகனம் சென்று,

டெங்கு மற்றும் சிக்கன் குனியா நோய் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் என சுகாதாரத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தொடக்க விழாவில் தேசிய சுகாதார திட்ட இயக்குநர் டாக்டர் கோவிந்தராஜ், செய்தி-கல்வி மற்றும், தொடர்பு பிரிவு துணை இயக்குநர் டாக்டர் ரகுநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*புதுக்கோட்டை-விமானம்*

புதுக்கோட்டை அருகே **கீரனூர்** பகுதியில் இன்று, **சிறிய** ரக **விமானம்** திடீரென சாலையில் தரையிறங்கியதால், பரபரப்பு ஏற்பட்டது. தொழில் நுட்ப கோளாறு காரணமாக, தவிர்க்க முடியாத சூழ்நிலையில் விமானத்தை சாலையிலேயே தரையிறக்க நேர்ந்ததாக விமானி கூறினார். தம்மையும் சேர்த்து விமானத்தில் இருந்த மூவரும் பாதுகாப்பாகவே உள்ளதாக அவர் தெரிவித்தார்.

*வானிலை*

வளிமண்டல கீழடுக்கு சுழற்ச்சி காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மற்றும் நெல்லை மாவட்டங்களின் மலைப் பகுதிகள், நீலகிரி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 19-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில்,

அதிகபட்சமாக, நெல்லை மாவட்டம் ஊத்துப் பகுதியில், 9 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

ஆடவர்-கிரிக்கெட்

இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே, 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி, கொல்கத்தாவில் நாளை தொடங்க உள்ளது. சுப்மான் கில் தலைமையிலான இந்திய அணியினர் அண்மையில் வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிராக கிடைத்த வெற்றியை, தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் முனைப்புடன், நாளைய போட்டியில் களம் இறங்க உள்ளனர்.

வில்வித்தை

டக்காவில் நடைபெறும் 24-ஆவது ஆசிய வில்வித்தை சாம்பியன் பட்டப் போட்டிகளில், இந்திய அணியினர் இன்று 2 தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளனர். இப்போட்டிகளின் காம்பவுண்ட் மகளிர் குழுப் பிரிவில், தீப்ஷிகா, ஜோதி வென்னம், பிரிதிகா பிரதீப் ஆகியோர் அடங்கிய இந்தியக் குழு கொரியாவைத் தோற்கடித்து தங்கம் வென்றது. காம்பவுண்ட் கலப்புக் குழுப் பிரிவில், இந்தியாவின் தீப்ஷிகா-அபிஷேக் வர்மா இணை பங்களாதேஷ் இணைப்பாக தங்கப் பதக்கம் வென்றது. காம்பவுண்ட் ஆடவர் குழு பிரிவில், பிரதமேஷ், அபிஷேக் வர்மா, சகீல் ஜாதவ் ஆகியோர் அடங்கிய இந்திய குழு இறுதிப் போட்டியில் கஜகஸ்தானிடம் தோல்வி அடைந்து, வெள்ளிப் பதக்கம் வென்றது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பீகாரில் 2 கட்டங்களாக நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள், நாளை எண்ணப்பட உள்ளன.

ஏற்றுமதியாளர்களுக்கான மத்திய அரசின் கடன் உத்தரவாத திட்டத்தினால், உலகச் சந்தையில் இந்திய பொருட்களின் போட்டித் திறன் வலுப்பெறும் என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 19-ஆம் தேதி கோவையில், தென்னிந்திய இயற்கை வேளாண்மை மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

புதுச்சேரியில் நாளை நடைபெற உள்ள குழந்தைகள் தின விழாவில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கிறார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.
Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 13.11.2025/Script.

-----------------------------